தினமலர் சென்னை 25-1-2007

# பகீர் !

## தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவல் அம்பலம்

## குண்டுகள் தயாரிக்கும் பொருட்களுடன் ஒன்பது பேர் கைது

சென்னை, ஜன. 25-

வெடிகுண்டு தயாரிப்பதற்கும், ராக்கெட் லாஞ்சர்களை இயக்கவும் தேவைப்படும் இரும்பு உருளைகள் (பால்ரஸ்கள்) சென்னையிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற ஐந்து விடுதலைப் புலிகளும், அவரது கூட்டாளிகள் நான்கு பேரும் நேற்று கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து ஐந்தாயிரம் கிலோ எடையுள்ள இரும்பு உருளைகள் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட ஒன்பது பேரில் எட்டு பேர் சென்னையிலும், ஒருவர் தூத்துக்குடியிலும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கடத்தலுக்கு பயன்படுத்திய மினி லாரி, கார் மற்றும் ஐந்து லட்சம் ரூபாய் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இவர்களை கைது செய்துள்ளதன் மூலம் தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவி உள்ளது அம்பலமாகியுள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் இரவு இலங்கை அகதிகள் என்ற பெயரில் ஐந்து பேர் சிக்கினர். அவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என்ற சந்தேகம் கியூ பிராஞ்ச் போலீசுக்கு எழுந்துள்ளது. அவர்களுடன் கூட்டாளிகள் நான்கு பேரும் இருந்தனர்.

இது தொடர்பாக டி.ஜி.பி., அலுவலகம் நேற்று மாலை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை யாழ்ப்பாணம் ஏராளியைச் சேர்ந்தவர் சிவா என்ற சிவகரன்.



சென்னையில் பிடிபட்ட விடுதலைப் புலிகள் மற்றும் அவரது ஆதரவாளர்களை போலீசார் நேற்று கைது செய்து, எழும்பூர் கோர்ட்டுக்கு அழைத்து வந்தனர்.

இவரது தந்தை சிவஞான சுந்தரம். இலங்கையிலிருந்து 2000ம் ஆண்டு அகதியாக தமிழகம் வந்து மண்டபம் முகாமில் தன்னை பதிவு செய்து கொண்டார். 2002ம் ஆண்டு முகாமிலிருந்து வெளியேறி, தூத்துக்குடியில் உள்ள பிரபா என்ற பிரபாகரன் என்பவரின் வீட்டில் தங்கினார்.

பிரபாகரன் வீட்டிலிருந்து இலங்கைக்கு அத்தியாவசியப் பொருட்களை கடத்தி வந்துள்ளார். இவர் மீது சந்தேகம் ஏற்பட்டது. அவரை கியூ பிராஞ்ச் போலீசார் கண்காணித்து வந்தனர்.

அவரும், அவரது கூட்டாளிகள் சிலரும் சென்னை பெரியமேட்டில் இருந்தது சமீபத்தில் கியூ பிராஞ்ச் போலீசுக்கு

15ம் பக்கம் பார்க்க

# பகீர்...

முதல் பக்கத் தொடர்ச்சி

தெரிந்தது. அவர்கள் நேற்று முன்தினம் இரவு சென்னை பெரியமேடு பகுதியில் நின்றிருந்த லாரியில் பொருட் களை ஏற்றிக் கொண்டிருந்தனர். அவர் களை போலீசார் சுற்றி வளைத்து பிடித்தனர்.

சிவகரனுடன், இலங்கையைச் சேர்ந்த செல்வசேந்தன், சதீஷ் என்ற நித்தி, கரண் என்ற யோகராஜா, பாரதிதாசன் ஆகியோரும் திருச்சியைச் சேர்ந்த மயில்வாகனன், ஜெயவேல், ரஷீது அகமது ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் டி.என்.45-எஸ்-7534 மினி லாரியில் ஏற்றிக் கொண்டிருந்த பொருட்களை சோதனையிட்ட போது, எட்டு மில்லி மீட்டர் விட்டம் கொண்ட சைக்கிள் இரும்பு உருளைகள் (பால்ரஸ்கள்) மட்டுமே இருந்தன.

அந்த இரும்பு உருளைகளை 40 சாக்கு மூட்டைகளில் கட்டி வைத்திருந்தனர். அதன் எடை இரண்டாயிரம் கிலோ. இது தவிர ஐந்து லட்சம் ரூபாய் பணத்தையும், டாட்டா இண்டிகா காரையும் வைத்திருந்தனர். அவர்களிடம் மூன்று மொபைல் போன்களும் இருந்தன.

சிவகரனை தொடர்ந்து விசாரணை நடத்தியதில், இதே போன்ற இரும்பு உருளைகள் மும்பையிலிருந்து லாரி மூலம் வரவழைக்கப்பட்டதாகவும், அவை தூத்துக்குடியில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். உடனே, தூத்துக்குடி தெற்கு எம்பரர் தெருவில் வசிக்கும் பிரபாகரன் என்ற வேலுசாமி வீட்டை போலீசார் சோதனை செய்தனர். அங்கு 60 சாக்கு மூட்டைகளில் சைக்கிள் இரும்பு உருளைகள் சிக்கின. இதையடுத்து பிரபாகரனும் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக சென்னை நகர கியூ பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். சதித்திட்டம்(120-பி) மற்றும் 10, 13(1)(2) மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967ன் பிரிவு(5) வெடிமருந்துப் பொருட்கள் சட்டம் மற்றும் 14ம் பிரிவு அயல்நாட்டவர் சட்டம் 1946ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மினி லாரி, கார், ஐந்து லட்சம் ரூபாய் பணம், மூன்று மொபைல் போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கியூ பிராஞ்ச் போலீசார் வசம் பிடிபட்ட சிவகரன், செல்வசேந்தன், சதீஷ் என்ற நித்தி, கரண் என்ற யோகராஜா, பாரதிதாசன் ஆகிய ஐந்து பேரும் விடுதலைப் புலிகள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மீண்டும் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருப்பது தமிழக அரசை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

## கைதான புலிகள் விவரம்

1.சிவகரன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அகதி என்ற போர்வையில் 2000ம் ஆண்டிலேயே மண்டபம் முகாமிற்கு வந்தவர். 2002ம் ஆண்டிலிருந்து இலங்கைக்கு பல பொருட்களை கடத்தி வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2. செல்வசேந்தன் என்ற சேந்தன்(34). இவருக்கு கிரேசியன் என்ற பெயரும் உள்ளது. யாழ்ப்பாணம் அருகேயுள்ள கதம்ப வாசகம் மாதகல் மேற்கு பகுதியைச் சேர்ந்த தங்கமயில் என்பவரின் மகன் இவர். 1994ம் ஆண்டு தமிழகம் வந்தவர். திருச்சி கே.கே.நகரில் ஐஸ்கிரீம் கடையும் எஸ்.டி.டி., பூத்தும் நடத்தி வருவதாக போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

3. சதீஷ் என்ற நித்தி(18). மட்டக்களப்பு கல்லாரி, திருச்செந்தூர் முருகன் கோவில் தெருவைச் சேர்ந்த துசியந்தன் மகன். திருச்சியில் செல்வசேந்தனின் கடையில் வேலை செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

4. கரண் என்ற யோகராஜா(25). கிளிநொச்சியைச் சேர்ந்தவர். இவரது தந்தை சிவசுப்பிரமணியம். திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் முகாமில் பதிவு செய்து கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

5. பாரதிதாசன் என்ற பாரதி(22). யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காந்தி என்பவரின் மகன். இவரும் திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் முகாமில் பதிவு செய்து கொண்டதாக போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஐந்து பேரும் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படுகிறது. இவர்களில் சிவகரன் 2002ம் ஆண்டிலிருந்து இலங்கைக்கு பல பொருட்களை கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு உதவியாக இருந்தவர்கள் விவரம் வருமாறு:

1. மயில்வாகனன்(35). இவர் திருச்சி பெரிய மிளகு பாறையில் உள்ள கள்ளர் தெருவைச் சேர்ந்த மலைக்கருப்பன் மகன். கார் டிரைவர் தொழில் செய்து வருகிறார்.

2. எஸ்.ஜெயவேல்(37). இவர் திருச்சி பாலக்கரை கீழப்புதூர் சாலையைச் சேர்ந்த சீனிவாசன் மகன். இவர் மினி லாரியை சொந்தமாக வைத்து ஓட்டி வருகிறார்.

3. ரஷிது அகமது(40). இவர் திருச்சி வள்ளுவர் நகரில் உள்ள ஹாசிம் பாய் காம்பவுண்ட் வளாகத்தைச் சேர்ந்த அமீர்ஜான் மகன்.

4. பிரபாகரன். இவர் தூத்துக்குடியைச் சேர்ந்தவர். தமிழ் தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர். இவர் தான் சிவகரனை தங்க வைத்துக் கொண்டு கடத்தலுக்கு துணையாக இருந்தவர்.